# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ        அதிவிசேஷமானது

අංක 1832/17- 2013 ඔක්තෝබර් 15 වැනි අඟහරුවාදා - 2013.10.15

***1832/17 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சபரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், பெல்மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில், நவதுன் கோரளையில், மெதபத்துவை சிறு பிரிவில், தெமனகம்மன என்னும் கிராமத்தில் (மு.கி.ப. 16) அமைந்துள்ள, இரத்தினபுரி மாவட்ட நில அளவை அதிகாரி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்/பிஎல்எம்/2012/1059 இலக்கமும் 2013.04.11 ஆந் திகதியுமுடைய ஆரம்ப வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் காட்டப்பட்டுள்ள சுமார் 0.1182 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் குறிப்பிப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணித்துண்டு :

**துண்டு 'ஏ' - பீல்லதெனிய தோட்டம் - விஸ்தீரணம் : சுமார் 0.1182 ஹெக்டயார்**

வடக்கு : பிரதேச சபைப் பாதை மற்றும் ஓடை ; கிழக்கு : ஓடை ; தெற்கு : பிரதேச சபைப் பாதை, ஆர். எம். லுவிஸ் சிஞ்ஞோ என்பவர் உரிமை கோரும் அன்னத்தாகலஹேன மற்றும் கே. பீ. ஆர். விஜேதிலக்க என்பவர் உரிமை கோரும் பீல்லதெனிய தோட்டம் ; மேற்கு : கே. பீ. ஆர். விஜேதிலக்க என்பவர் உரிமை கோரும் பீல்லதெனிய தோட்டம் மற்றும் பிரதேச சபைப் பாதை.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/8/2012/பிசீ/301.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.08.28.

11-79


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.